இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 351 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆடி 15 – புதன்கிழமை 31 ஜுலை 2024 – மதுரை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 351: Thiruvalluvar Year - 2055 - Aadi 15 - Wednesday 31 July 2024 - Madurai 16 Pages ₹ 5.00


## வயநாடு பகுதியில் நிலச்சரிவு மற்றும் பெருவெள்ளம்; மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்காக, தமிழ்நாடு அரசின் சார்பில்

# கேரளாவுக்கு 5 கோடி ரூபாய் நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, ஜுலை 31 -**

**கேரள மாநிலம், வயநாடு பகுதியில் ஏற்பட்டுள்ள கடும் மழைப்பொழிவு மற்றும் நிலச்சரிவு பாதிப்புகள் குறித்து கேரள மாநில முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்களுடன் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார்! பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குத் தேவையான உதவிகளை தமிழ்நாடு அரசின் சார்பில் வழங்கிடவும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார். மேலும் நிவாரண உதவிக்கு ரூ.5 கோடி வழங்கவும் உத்தரவிட்டுள்ளார்.**

இதுகுறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:-

நேற்று முதல் கேரள மாநிலம் வயநாடு பகுதியில் கடுமையான மழைப்பொழிவின் காரணமாக ஏற்பட்ட நிலச்சரிவில் விலைமதிக்க முடியாத உயிரிழப்புகளும், பொதுச் சொத்துக்களுக்கு சேதமும் ஏற்பட்டுள்ள நிலையில், இன்று (30.07.2024) கேரள மாநில முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்களை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பேசினார்.

இந்த இயற்கை பேரிடரினால் ஏற்பட்டுள்ள உயிரிழப்புகளுக்கு தனது வருத்தத்தையும், ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக் கொண்ட முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாடு அரசின் சார்பில் தேவையான அனைத்து உதவிகளையும் செய்து தருவதாகவும் உறுதியளித்துள்ளார்.

இந்நிலையில், பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதில் கேரள அரசுக்குத் துணையாக பணியாற்றிட தமிழ்நாட்டிலிருந்து இரண்டு மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகளான டாக்டர் கீ.சு. சமீரன் மற்றும் ஜானி டாம் வர்கீஸ் ஆகியோர் தலைமையில் மீட்புக் குழுவினரை உடனடியாக அனுப்பிட உத்தரவிட்டுள்ளார்.

மேலும், பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் நிவாரணப் பணிகளுக்கென கேரள அரசுக்கு தமிழ்நாடு

> **வயநாடு பகுதியில் கடுமையான மழைப்பொழிவின் காரணமாக ஏற்பட்ட நிலச்சரிவில் விலைமதிக்க முடியாத உயிரிழப்புகளும், பொதுச் சொத்துக்களுக்கு சேதமும் ஏற்பட்டுள்ள நிலையில், கேரள மாநில முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்களை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பேசினார்.**

அரசின் சார்பில் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 5 கோடி ரூபாயினை வழங்கிடவும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

தமிழ்நாட்டிலிருந்து அனுப்பப்படவுள்ள மீட்புக் குழுவில் தீயணைப்புத் துறையிலிருந்து 20 தீயணைப்பு வீரர்கள் ஒரு இணை இயக்குநர் தலைமையிலும், 20 மாநிலப் பேரிடர் மேலாண்மை மீட்புக் குழு வீரர்கள் ஒரு காவல் கண்காணிப்பாளர் தலைமையிலும், 10 மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் அடங்கிய ஒரு மருத்துவக் குழுவினரும் கேரள அரசுடன் மீட்பு மற்றும் மருத்துவச் சிகிச்சைப் பணிகளில் இணைந்து பணியாற்றுவார்கள். இந்தக் குழுவானது இன்றே கேரளாவிற்குப் புறப்பட முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

இவ்வாறு தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

இதனைத் தொடர்ந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**கேரள மாநிலம், வயநாட்டில் ஏற்பட்டுள்ள பெரும் நிலச்சரிவு நிகழ்வுகள் மற்றும் அதனால் விலைமதிப்பற்ற மனித உயிர்கள் பறிபோனதைக் குறித்து அறிந்து மிகவும் வேதனைக்குள்ளானேன்.**

**இன்னமும் பலர் நிலச்சரிவில் சிக்கியுள்ளனர் எனத் தெரிய வந்துள்ளது. முழுவீச்சில் நடைபெற்று வரும் மீட்புப் பணிகள் நிச்சயம் அனைவரையும் காப்பாற்றும் என்று நம்புகிறேன்.**

**நமது சகோதர மாநிலமான கேரளம் நெருக்கடியில் சிக்கியுள்ள இந்த நேரத்தில், அவர்களுக்குத் தேவைப்படும் எந்த விதமான இயந்திரம், பொருள் மற்றும் மனித ஆற்றல் சார்ந்த உதவியையும் வழங்கத் தமிழ்நாடு அரசு தயாராக உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.07.2024) தலைமைச் செயலகத்தில், ஒன்றிய அரசின் 2023–ஆம் ஆண்டுக்கான வீர தீரச் செயலுக்கான ஜீவன் ரக்ஷா விருதினைப் பெற்ற தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த மரிய மைக்கேல் மற்றும் விஜயகுமார் ஆகியோருக்கு விருதுக்கான பதக்கம் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கி சிறப்பித்தார். இந்நிகழ்வின் போது, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பொதுத்துறைச் செயலாளர் திருமதி. ரீட்டா ஹரீஷ் தக்கர், மற்றும் துணைச் செயலாளர் (மரபு) திருமதி. ஜெ. இ. பத்மஜா ஆகியோர் உடனிருந்தனர்.

## விவசாயச் சங்கங்களின் கோரிக்கைகளை ஏற்று மேட்டூர் அணையிலிருந்து

# கிழக்கு மற்றும் மேற்கு கரை கால்வாய்களில் தண்ணீர் திறப்பு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, ஜுலை 31 -

மேட்டூர் அணையிலிருந்து கிழக்கு மற்றும் மேற்கு கரை கால்வாய்களில் பாசனத்திற்காக நீர் திறந்து விட சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி அவர்களிடமும், சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.இராஜேந்திரன் அவர்களிடமும், விவசாயச் சங்கங்களை சார்ந்தவர்களும், விவசாயப் பெருமக்களும் நேரில் வந்து கேட்டுக் கொண்டதற்கிணங்க, முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு கொண்டு சென்று அதனை பரிசீலித்தப் பின் மேட்டூர் கிழக்கு மற்றும் மேற்கு கால்வாய்களில் பாசனத்திற்கு 30.07.2024 முதல் நீர் திறந்து விட தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

மேட்டூர் கிழக்கு மற்றும் மேற்கு கரை கால்வாய்கள் மூலம் முறையே 27000 ஏக்கரும், 18000 ஏக்கரும் ஆக மொத்தம் 45000 ஏக்கர் பாசன வசதி பெறுகின்றது. இவற்றில் சேலம் மாவட்டத்தில் 16443 ஏக்கரும், ஈரோடு மாவட்டத்தில் 17230 ஏக்கரும், நாமக்கல் மாவட்டத்தில் 11327 ஏக்கர் நிலங்களும் பாசன வசதி பெறுகின்றன.

மேட்டூர் அணையிலிருந்து கிழக்கு மற்றும் மேற்கு கரை கால்வாய்களில் பாசனத்திற்காக நீர் திறந்து விட விவசாய சங்கங்களைச் சார்ந்தவர்களும், விவசாயப் பெருமக்களும் சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் ஆகியோரை கேட்டுக் கொண்டுள்ளதாலும் தற்போது மேட்டூர் அணையின் நீர்மட்டம் 119 அடிக்கு மேல் உள்ளதாலும், 2024-2025 ஆம் பாசன ஆண்டில் சேலம், நாமக்கல் மற்றும் ஈரோடு மாவட்டங்களிலுள்ள பாசன நிலங்களுக்கு, மேட்டூர் கிழக்கு மற்றும் மேற்கு கரை கால்வாய்களில் 30.07.2024 முதல் 13.12.2024 வரை 137 நாட்களுக்கு மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்படும்.

இவ்வாறு தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# வயநாடு நிலச்சரிவில் 84 பேர் பலி!

## ராகுல் – பிரியங்கா காந்தி விரைந்தனர்!

**வயநாடு, ஜுலை 31 -**

**வயநாடு நிலச்சரிவில் 84 பேர் பலியாகியுள்ளனர். இச்செய்தி அறிந்த நாடாளுமன்ற மக்களவை எதிர்ககட்சித் தலைவர் ராகுல் காந்தி, காங்கிரஸ் பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தி ஆகியோர் வயநாடு விரைந்துள்ளனர்.**

கேரள மாநிலம் வயநாடு சூரல் மலை பகுதியில் நேற்று முன்தினம் காலை முதலே லேசான நிலச்சரிவுகள் ஏற்பட்டன. அப்பகுதியில் இடைவிடாமல் கனமழை பெய்து காட்டாறுகளில் வெள்ளம் கரை புரண்டோடியது. இதனால் நேற்று அதிகாலை 2 முறை சூரல் மலை பகுதியில் அடுத்தடுத்து பயங்கர நிலச்சரிவு ஏற்பட்டது.

சூரல்மலை பகுதியில் அடுத்தடுத்த நிலச்சரிவு ஏற்பட்டதில் 500க்கும் மேற்பட்ட வீடுகள் சிக்கின. இந்த வீடுகளில் சிக்கிய 1,000க்கும் மேற்பட்டோரை மீட்கும் பணிகளில் கேரளா மாநில பேரிடர் மீட்புக் குழுவினர் ஈடுபட்டுள்ளனர். இதில் நேற்று மாலை 3 மணி வரை 84 பேர் பலியானதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் பலி எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது. இதனிடையே நிலச்சரிவு மீட்புப் பணிக்கு ராணுவத்தினரை அனுப்புமாறு மத்திய அரசிடம் கேரளா மாநில அரசு கோரிக்கை விடுத்தது. இதனடிப்படையில் தமிழ்நாட்டின் உதகையில் இருந்து மெட்ராஸ் ரெஜிமெண்ட் வீரர்கள் குழு நிலச்சரிவு மீட்பு பணிகளுக்காக கேரளாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

முன்னதாக தமிழ்நாட்டின் கோவை சூலூர் விமான படை தளத்தில் இருந்து விமானப் படையின் இரண்டு ஹெலிகாப்டர்கள் உடனடியாக வயநாடு பகுதிக்கு விரைந்து சென்று மீட்புப் பணிகளில் இறங்கியது.

சூரல்மலை பகுதியில் மிக முக்கியமான தரைப்பாலம் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுவிட்டது. இதனால் 500க்கும் மேற்பட்ட குடும்பங்களை மீட்க முடியாத நிலைமை உள்ளது. இதையடுத்து அப்பகுதியில் பேரிடர் மீட்புக் குழுவினர் தற்காலிக பாலத்தை அமைத்தும் வருகின்றனர். மேலும் வயநாடு நிலச்சரிவு பகுதியில் மீட்பு பணிகளை முடுக்கி விடவும் மேற்பார்வையிடவும் மாநில அமைச்சர்கள் அடுத்தடுத்து அங்கு விரைந்துள்ளனர். இதனிடையே நிலச்சரிவு அபாயம் தொடர்பாக தொடர்ந்து முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டு வந்ததால் பலர் முகாம்களுக்கு ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டிருந்தனர். இதனால் உயிர் சேதம் பெருமளவு தவிர்க்கப்பட்டுள்ளதாக கேரள அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கேரள சுகாதாரத்துறை அமைச்சர் வீணா ஜார்ஜ் கூறுகையில், மாநில சுகாதாரத்துறை மாவட்டங்களில் கட்டுப்பாட்டு அறைகளை திறந்துள்ளது. 8086010833, 9656938689 ஆகியவை உதவி எண்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. வைத்திரி, கல்பட்டா, மேப்பாடி, மனந்தவாடி மருத்துவமனைகள் தயார் நிலையில் உள்ளன. அனைத்து நிலை சுகாதாரப் பணியாளர்களும் ஏற்கனவே வரவழைக்கப்பட்டுள்ளனர் என்றார்.

## கேரளாவுக்கு உடனடியாக ரூ.5,000 கோடி வழங்க வேண்டும்!

# வயநாடு நிலச்சரிவை தேசிய பேரிடராக அறிவிக்க வேண்டும்!

## நாடாளுமன்றத்தில் ‘இந்தியா’ கூட்டணி கட்சி எம்.பி.க்கள் வலியுறுத்தல்!

*புதுடெல்லி, ஜுலை 31-*

*கேரள மாநிலத்தில் ஏற்பட்டுள்ள நிலச் சரிவை தேசிய பேரிடராக அறிவிக்க வேண்டும் என்றும், நிலச்சரிவு மீட்பு பணிகளுக்காக உடனடியாக 5 ஆயிரம் கோடி ரூபாயை வழங்க வேண்டும் என்றும் நாடாளுமன்றத்தில் இந்தியா கூட்டணி கட்சி எம்.பி.க்கள் வலியுறுத்தியுள்ளனர்.*

*கனமழையால் கேரள மாநிலம் வயநாடு உட்பட பல்வேறு இடங்களில் ஏற்பட்ட கடும் நிலச்சரிவு குறித்து விவாதிக்க வேண்டும் என மாநிலங்களவையில் இந்தியா கூட்டணி கட்சிகளின் எம்.பி.,க்கள் வலியுறுத்தினர். இதற்கு முதலில் அனுமதி மறுக்கப்பட்டது. ஆனால் எதிர்க்கட்சி உறுப்பினர்களின் கடும் எதிர்ப்பை அடுத்து, இதுகுறித்து விவாதிக்க அனுமதியளிக்கப்பட்டது. அப்போது பேசிய இந்தியா கூட்டணி கட்சிகளின் எம்.பி.,க்கள், கேரளாவில் நிகழ்ந்த நிலச்சரிவை தேசிய பேரிடராக அறிவிக்க வேண்டும் என்றும், மீட்பு பணிகளுக்காக உடனடியாக 5 ஆயிரம் கோடி ரூபாயை அம்மாநிலத்துக்கு வழங்க வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.*

**எதிர்க்கட்சி தலைவர் ராகுல்காந்தி!**

*மக்களவையில் பேசிய எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி, மீட்பு பணிகளுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் கேரள அரசுக்கு ஒன்றிய அரசு செய்ய வேண்டும் என்றும், நிவாரண பணிகளுக்குத் தேவையான நிதியை ஒதுக்கீடு செய்து உடனடியாக விடுவிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.*

*மேலும் அவர் பேசுகையில், வயநாட்டின் பல்வேறு பகுதிகளில் கடுமையான நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது நிலச்சரிவால் 70க்கும் மேற்பட்ட மக்கள் உயிரிழந்துள்ளனர்.*

*நிலச்சரிவால் முண்டக்கை கிராமம் துண்டிக்கப்பட்டுள்ளது. பலர் தங்கள் இன்னுயிரையும், வாழ்வாதாரத்தையும் இழந்துள்ளனர். மீட்பு பணிகளுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் கேரள அரசுக்கு ஒன்றிய அரசு செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.*